Lifeline

மீண்டும் வாழ்வோம்

கிடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 17 Pages 4 Sunday, 15 June 2008 Free Copy

மீண்டும் மக்களை சீண்டியது இயற்கை

சீரற்ற கால நிலைகளால் இலங்கையில் மீண்டும் ஒரு வெள்ள அனர்த்தம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்டுள்ளது

அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் 23 பேர் உயிரிழந்துள்ளதுடன் 91 796 குடும்பங்களைச் சேர்ந்த ஏறத்தாள நான்கு இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் 116 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் 50 மில்லி யன் ரூபாய் நிதியை உடனடியாக ஒதுக்கி யுள்ளது.

அனாத்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஹெட்டியாராச்சியின் மேற்பார்வையின் கீழ் மீட்பு பணிகளுகும் நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்துடன் இணைந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டர் அமைப்புகளும் துயர் துடைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளன.

கொழும்பு,களுத்துறை.காலி,இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் அதிகளவில் பாதிக்பட்டுள்ளன.

ஐப்பானின் சர்வதேச ஒத்துழைப்பிற்காக மன்னறம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட

படம் - நன்றி ஐ.ஆர்.ஐ.என் இணையம்

பிரதேசங்களில் சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

சுமார் 17 மில்லியன் ரூபா பெறுமதியான நீர் சுத்தீகரிப்பு இயந்திரங்களை அந்த நிறுவனம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கியுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியமான யுனிசெப் அமைப்பானது பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சிறுவர்களுக்கு அதி சக்தி மிக்க பிஸ்கற்வகைகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக 3 தொன் அதி சக்தி பிஸ்கட்டுக்களை யுனிசெப் வழங்கவுள்ளதாக தெரிவிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களின் ஒரு தொகுதியை உலக உணவு ஸ்தாபனம் வழங்கியுள்ளது

50000 பேருக்கு ஒருவாரத்திற்கு தேவையான 98 மெற்றிக் தொன் அரசி மற்றும் என்னெய் ஆகியவற்றை உலக உணவு ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

நீர்பாசன திணைக்களத்தின் வெள்ள அனர்த்த தடுப்பு பிரிவின் தலைவராான பி.கே.ஜெயசுந்தர இந்த வெள்ள அனர்த்தத்திற்கு காரணம் உரிய வடிகாலமைப்பு வசதிகள் மேற்கொள்ளபடாமையே என்று கூறியுள்ளார்

ஐ.ஆர்.ஐ.என் இணையத்தளத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவர் இதனை குறிப்பிட்டுள்ளார். களுத்துறை போன்ற மாவட்டங்களில் மலையகப் பகுதிகளில் இருந்து வரும் நதி கள் கடலுடன் சங்கமிக்கும் பகுதிகள் காணப்படுவதாகவும் கடுமையான மழை வீழ்ச்சி ஏற்படும் போது இந்த நதிகளில் நீர் வரத்து அதிகமாகவுடன் அவற்றின் வேகமும் பல மடங்கு அதிகரிப்தே வெள்ளப் பெருக்கு ஏற்பட பிரதான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய மலை நாட்டில் இருந்து வரும் நதிகளை மறித்து அணைக்கட்டுக்களை ஏற்படுத்தி அதன் வேகத்தையும் நீரின் அளவையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாம் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை பெருமளவு குறைக்க முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

களுத்துறை போன்ற மாவட்டங்களில் மலையகப் பகுதிகளில் இருந்து வரும் நதிகள் கடலுடன் சங்கமிக்கும் பகுதிகள் காணப்படுவதாகவும் கடுமையான மழைவீழ்ச்சி ஏற்படும் போது இந்த நதிகளில் நீர் வரத்து அதிகமாகவதுடன் அவற்றின் வேகமும் பல மடங்கு அதிகரிப்தே வெள்ளப் பெருக்கு ஏற்பட பிரதான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும். எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிறந்த நாள் உங்கள் திருமண நாள்களையும் உங்கள் பயணப்படங்களையும் எமக்கு அனுப்பிவையுங்கள். அவையும் மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க வாய்ப்பிருக்கிறது.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 077 4952242
www.lifeline@lifelinesrilanka.com

சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 128.ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 73,090குடும்பங்களைச் சேர்ந்த 260,823 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ Unicef அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் RDHS போரனை மறுவாழ்வுத் திட்டத்தினை ஆரம்பித்து 1 வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் இத்திட்டத்தின் மூலம் 1102 குழந்தைகள் பயனடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

✱ மே மாதம் 28ஆம் திகதி கிளிநொச்சியில் UNICEF நிறுவனமானது நீர் மற்றும் ககாநாரத் திட்டங்கள் தொடர்பான அரைநாள் பயிற்சிப் பாசறை ஒன்றை நடத்தியுள்ளது. இந்நிகழ்வில் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், UN அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் அரச திணைக்கள ஊழியர்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

✱ வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உலர் உணவ விநியோக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தாமதம் நிலவி வருகிறது. மன்னார் பேசாலை நலன்புரி நிலைய மக்களுக்கு 2008ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

✱ ZOA, World Vision, SCISL, ADT, Caritas, IOM மற்றும் UNHCR நிறுவனங்கள் இணைந்து மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் புதிதாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு, சுவர்க்காரம், சமயலறை உபகரணங்கள் மற்றும் பாய்கள் போன்றவற்றை வழங்கியுள்ளன.

பேசும் படம்

யாழ்ப்பாணத்திலுள்ள மன்னார் பண்ணை சிவன் கோவில் அருகே தன்னுடைய கடையில் துவிச்சக்கர வண்டி திருத்தும் பணியில் இந் நபர் ஈடுபட்டுள்ளார். பொலிஸ் ஊரடங்கின் போது கடைகளை கண்டிப்பாக பிற்பகலில் மூட வேண்டும். யாழ்ப்பாண மக்கள் சைக்கிள்களை அதிகம் போக்குவரத்திற்கு பயன்படுத்துவதால் இந்தக் கடையானது எப்பொழுதும் சுறுசுறுப்பாக காணப்படுகிறது. மேலும் துவிச்சக்கரவண்டி பாவனையானது சூழல் மாசடைவதைத் தடுக்கிறது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அரசாங்க சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்தபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே 0774952242
மின்அஞ்சல்: lifelinesrilanka@yahoo.com

வாழ்வின் வர்ணங்கள்

தலைமன்னாரில் சிறிய கடையில் தன் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் 55 வயதான **பஷீப் ஷெரிப் சீனிப் புலவர்.**

1970 களில் மலையகப் பெருந்தோட்ட மக்கள் எவ்வாறு இந்தியா நோக்கி கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

1964ஆம் ஆண்டு புயல்தாக்கிய நேரம் உசைன் என் தொரு கப்பல் ஒடியது. அதன் பின்னர் இர்வின் என்ற கப்பல் வந்தது. அதன் பெயரை ராமனுஜம் என்று மாற்றினார்கள். அது இந்தியாவுக்குச் சொந்தமானது. வாரத்தில் 3 நாட்கள் போக்கு வரத்து செய்யும். திங்கள் அங்கிருந்து வந்து செவ்வாய் க்கிழமை திரும்பிச் செல்லும். அதே போல் புதன் கிழமை வந்துவிட்டு அன்றே திரும்பிவிடும். பின்னர் வெள்ளிக் கிழமை மாலையில் வந்து சனிக்கிழமை காலை திரும்பிக் செல்லும். கிட்டத்தட்ட 1000 பேர் பயணிக்கலாம். தோட்டத்தில் இருப்பவர்களை பய னிக்க அனுமதித்த பின்னர்தான் மற்றவர்களை அனுமதிப் பார்கள். 1000 பேருக்கு மேல் ஏற்ற மாட்டார்கள். மிஞ்சிய வர்களை அடுத்த முறை ஏற்றுவார்கள். இந்தியாவிலிருந்து வருபவர்கள் கொழும்பு, கண்டி, நுவரெலியா சென்று வாணி பத்தில் ஈடுபடுவார்கள்.

ஏன்று அன்றைய தனது மலரும் நினைவுகளை எம்முடன் பகிரி ஷெரிப் பகிர்ந்து கொண்டார்.

புதிய வாழ்வின் ஆரம்பம்

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளில் அரசின் உதவியுடன் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றன. வவுனியா கற்குளம் மீள்குடியேற்ற கிராமம் அவ்வாறு நலன்புரி முகாம்களில் வாழும் மக்களை மீளக்குடியமர்த்துள்ள ஒரு கிராமமாகும்

அங்கு நாம் சென்ற போது மகேஸ்வரி கறுகறுப்பாக தையலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு வாழ்வாதாரத்தை ஈட்டித் தரும் கைத் தொழில் தையல் தான்.

வவுனியா சிதம்பரபுரம் முகாமிலிருந்து கற்குளம் 31ஆம் இலக்கக் காணியில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்.

வவுனிய மாவட்ட கற்குளம் மீள்குடியேற்ற கிராமம்

1990 ல் தம்பமடுவில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்று அங்கு 14 வருடம் சென்னையில் உள்ள புழல் அகதி முகாமில் மகேஸ்வரி வாழந்துள்ளார்

2004ஆம் ஆண்டு சுரேஷக உதவியோடு தாயகம் திரும்பிய அவர் மூதூர் பெருவெல்லிக் கிராமத்தில் குடியேறியுள்ளார் எனினும் 2005ல் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் அங்கிருந்து இடம் பெயர்ந்து வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி முகாமில் தங்கியிருந்துள்ளார் 2007 ஆண்டு அவருக்கு காணி கிடைத்துள்ளது

வவுனியா கற்குளம் மீள்குடியேற்ற கிராமத்தில் முழுகுடிஆன் நிதியுதவியுடன் 55 வீடுகள் பூரணப்படுத்தப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் 20 குடும்பங்கள் காணிகளை மட்டும் பெற்று தற்காலிகக் கொட்டில்களை கயமாக அமைத்து அங்கு வாழ்ந்து வருகிறார்கள். கற்குளம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வவுனியா பிரதேச செயலகம் காணிகளை வழங்கியுள்ளது. குநுறுநுனு அமைப்பு இம்மீள்குடியேற்றத்தினை நடைமுறைப்படுத்துகின்றது.

மகேஸ்வரிக்கு இத்திட்டத்தின் மூலம் காணி மட்டுமே கிடைத்துள்ளது. வீடு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கின்ற போதும் காணி கிடைத்தே அவருக்கு பெருமளவு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காணி கிடைத்தவுடன் தனது பிள்ளைகள் எல்லோரும் சந்தோசித்ததாகவும் முகாமில் இருப்பதை விட அவர்கள் இங்கு வாழவதையே விரும்புவதாக அவர் கூறினார்

தற்போது 10,000 குடும்பங்களை மீளக்குடியமர்த்த வவுனியா பிரதேச செயலகத் திடம் காணிகள் கோரப்பட்டுள்ளன. இவற்றை வழங்குவதில் நடைமுறை சிக்கல்கள் காணப்படுகின்ற போதும் பிரதேச செயலகம் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இது குறித்து வவுனியா பிரதேச செயலாளர் செல்வி துவராராசி கருத்து வெளியிடுகையில் 'இந்த வருடத்தில் 250 குடும்பங்களை கற்குளம் கிராமத்தில் மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

இடம்பெயர்வுகளால் இயல்பு வாழ்வை இழந்து தவிக்கும் மக்களுக்கு நிரந்தரமான வாழ்விடம் என்பது ஒரு புதிய வாழ்வின் ஆரம்பமாகவே கருதப்படுகின்றது.

தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி 'அகதி' என்ற குறியீட்டுப் பெயருடன் எத்தனை ஆயிரம் மக்கள் புது வியியல்களுக்காக காத்திருக்கின்றனர் அவர்களின் வாழ்விலும் வசந்தம் வீச வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்

தற்போது 10,000 குடும்பங்களை மீளக்குடியமர்த்த வவுனியா பிரதேச செயலகத் திடம் காணிகள் கோரப்பட்டுள்ளன. இவற்றை வழங்குவதில் நடைமுறை சிக்கல்கள் காணப்படுகின்ற போதும் பிரதேச செயலகம் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றது

சாவரம்

வவுனியா மாவட்டம் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட அநேகமான மீள்குடியேற்ற கிராமங்களில் வேலையில்லா பிரச்சினைகள் காரணமாக மக்கள் பல சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின் றனர். அந்தவகையில் மெனிக்பாம் மீள்குடி யேற்ற கிராமத்தில் வசிக்கும் சிலர் தொழில் தேடுவ தில் ஏற்பட்டுள்ள சிரமங்க ளைத் தமது எண்ணக்கருத் தாக எம்மோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

பி.உத்தமபுத்திரன். நான் மேசன் தொழில் தான் செய்கின்றேன். அதைத் தொடர்ந்து செய்யும் அளவில் வேலை இங்கு குறைவு. சீமெந்து போன்ற பொருட்கள் வருவதற்கு தடைப்பட் டால் அந்தத் தொழிலும் செய்ய முடியாது. எனக்கு மூன்று பிள்ளை கள். இருந்தாலும் ஒரு பிள்ளை மட்டும்தான் பாடசாலை போகின்றார். மற்ற 2 பிள்ளைகள் பாடசாலைக் குப் போகவில்லை. வீட்டில்தான் இருக்கின்றார்கள். ஏனென்றால் தொழில் இல்லை சமாளிக்க முடியாதுள்ளது. ஒரு பிள்ளையை பாடசாலைக்கு சேர்க்க 5000 ரூபா தேவைப்படுகிறது. புத்தகப் பை, சீருடை, சப்பாத்து எல்லாம் வாங்

புலேந்திரன் லோகேஸ்வரன்

கிக் கொடுப்பதென்றால் மிகவும் கஷ்டம். அவர்களை செட்டிக்குளத்தில் தான் பாடசாலையில் சேர்க்க வேண்டும். இங்கு பெரிய வகுப்பு இல்லை. எல்லா வகையிலும் தொழில்தான் தேவைப்படுகிறது.

தொழிலுக்கு போவதானால் பஸ்ஸிலதான் வவுனியாவுக்குப் போய் வர வேண்டும். அதற்கும் போக்குவரத்து செலவு வருமானத்தை விட அதிகமாக இருக்கிறது. வருமானத்தை போக்குவரத்திற்குக் கொடுப்பதா அல்லது வீட்டுச் செலவுகளைப் பார்ப்பதா? ஒன்றுமே செய்ய இயலாத நிலையில் தான் இருக்கின்றோம்.

புலேந்திரன் லோகேஸ்வரன். எந்த வேலை என்று இல்லை. எந்த வேலை கிடைத்தாலும் செய்கின்றேன். வாணிபம் செய்வதற்கு செட்டிக்குளம் பகுதிக்கு போக இயலாமல் உள்ளது. பாதுகாப்பு பிரச்சினை காரணமாக வேலைக்கு போக முடியாதுள்ளது, இந்த பகுதியில் தொழில் இல்லை. 5 அல்லது 10 கிலோமீற்றர் தூரம் சென்றுதான் வேலை பார்க்கவேண்டும். அங்கு 500 ரூபா சம்பளம்தான் தருவார்கள். வீட்டில் ஆறு பேர் இருக்கின்றோம். எனவே அந்த வருமானம் போதாது. வேலை இருக்கின்ற நாட்களில் செட்டிக்குளம் சென்று வருகின்றோம். பழங்களைப் பறித்து விற்கின்றோம். அதை நாங்கள் விற்க முடியாது. சிள்ள பிள்ளைகள் மூலமாகத்தான் விற்கின்றோம்.

மரபுகளை மாற்றியமைக்கும் பெண்கள்

உலக கனேடிய பல் கலைக்கழக நிறுவனத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருப்போர்

'சமுதாயத்தை பற்றி நான் கணக்கெடுப்பதில்லை வீதியில் ஜீன்ஸ் சேர்ட் போட்டு போறம்போது பலர் கின்டல் செய்வார்கள் ஆனால் அவற்றையெல்லாம் நான் கண்டுகொள்வதில்லை. நாம் உழைத்து முன்னேற வேண்டும் என்றால் மற்றவர்களின் விமர்சனங்களை கருத்தில் கொள்ளக் கூடாது எனக்கு இந்தத்தொழிலை பயின்று அதன் மூலம் எனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்பதே ஒரே நோக்கம் என்று கூறினார் மட்டக்களப்பில் நாம் சந்தித்த மகேந்திரன் திஷேந்தினி.

இவர் ஓர் நவநாகரீக பெண்மணி என்று உங்களுக்குத் தோன்றலாம் ஆனால் அவர் தொழில் பயிற்சிக்காக அணியும் சீருடை பற்றியே எம்முடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கோயில்புற தீவில் மகேந்திரன் திஷேந்தினி.வசித்து வருகின்றார்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கல்வியை தொடர முடியாமல் போன பல இளம் பெண்களுக்கான தொழில் பயிற்சிகளை எளைய பல்வேறு உள்நாட்டு அரச சாா்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து உலக கனேடிய பல் கலைக்கழக நிறுவனம் வழங்கி வருகிறது.

இங்கு மகேந்திரன் திஷேந்தினி. போன்று பல பெண்கள் கல்வியு தொழில் பயிற்சிக்களை பெற்று வருகின்றனர் அவ்வாறு பயிற்சி பெரும் 20 வயதான பெரிள்பள் கிரிஷாந்தி தனது அனுபங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

தொழில் பயிற்சியை ஆரம்பிப் பதற்கு முள்னர் தச்சுத் தொழல் என்பது ஆண்கள் மட்டுமே செய்யும் ஒரு தொழிலாகவே தான் கருதியதாகவும் எனினும் நேர்முகத் தேர்வின் பின்னர் தொழில் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட போது தன்னால் முடியமா என்ற கேள்வி எழுந்ததாகவும் கிரிஷாந்தி குறிப்பிட்டார்.

புயிற்சிக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இடையில் விட்டுச் செல்லும் எண்ணம் கூட தனக்கு ஏற்பட்டதாகவும் எனினும் அந்த தவ றான முடியினை தான் மேற்கொள்ளாதமையால் இரண்டு வருடங்க ளாக தனது குடும்பத்திற்கு வேண்டிய வருமானத்தை பெறு வதற்கான தொழிலில் தள்ளாமல் ஈடு பட முடிவதாகவும் அவர் கூறினார்

பெரும்பாலான நிறுவனங்கள் பெண்களுக்கு தொடர்ச்சி யாக தையல், அழகு கலை மற்றும் கணினி பயிற்சிக ளையே வழங்கி வருகின்றன. இதனால் இவ்வாறான பெண்ணிலைப் படுத்தப்பட்ட தொழிற்களுக்கு பெரும் போட்டி நிலவுகின்றது.

எனவே தான் கனேடிய உலக பல் கலைக்கழக நிறுவனம் இளம் பெண்களுக்கு ஆண்களால் மட்டுமே கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வந்த உருக்கி ஒட்டும் பயிற்சி(வேல்டிங்) தச்சுதொழில் பயிற்சி மற்றும் அலுமினிய இணைப்புப் பயிற்சி போன்றவற்றை வழங்க தீர்மானித்து

எனினும் இத்தகைய பயிற்சிகளைப் பெரும்போது பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாக் இங்கு பயிற்சிபெறும் சிவலிங்கம் கௌஷலா கூறினார்.

ஆறுமாதகாலம பயிற்சிகளை பெறும் போது மனக்கசப்புகள் ஏற்பட்டதாகவும் எனினும் தாள்ள அவற்றை பொருட்படுத்தாது கடுமையாக உழைத்து இன்று தனித்து தொழில் செய்யும் ஆளுமையை கொண்டுள்ளதாகவும் கௌஷலா குறிப்பிட்டார்

மரபுகளை மாற்றி பெண்களும் வீடுகளுக்கு சென்று திருத்தப்பணிகள் மேற்கொண்டு வருவது அவர்களின் முன்னேற்றத்தின் எடுத்துக்காட்டு என்றும் அவர் கூறினார்.

ஆரம்பத்தில் பெண்கள் இந்தப் பயிற்சிகளை பெறுவது குறித்து சற்றே மாறுபட்ட எண்ணங்களை கொண்டிருந்த மக்கள் தற்போது தமது மன நிலைகளை மாற்றிக் கொண்டுள்ளனர்.

தன்னைப் போல தாங்களும் உயர வேண்டும் என்ற எண்ணம் தன்னை பார்க்கும் ஏனைய இளைஞர் யுவதிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே இந்த பயிற்சி நெறிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தான் உரிய தரப்பினரிடம் கோரியுள்ளதாகவும் கௌஷலா தெரிவித்தார்

இதேவேளை பயிற்சிகளை முற்றாக நிறைவு செய்யத பின்னர் சொந்தமாக வேலைத்தளம் அமைத்து உயர வேண்டும் என்பது மகேந்திரன் திஷேந்தினியின் நோக்கம்.

தனது குடும்பத்தை காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.

இவ்வாறான பயிற்சிகளை மேற்கொள்ளவது பெண்களின் எதிர்காலத்திற்கு பேருத

> **தன்னைப் போல தாங்களும் உயர வேண்டும் என்ற எண்ணம் தன்னை பார்க்கும் ஏனைய இளைஞர் யுவதிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே இந்த பயிற்சி நெறிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தான் உரிய தரப்பினரிடம் கோரியுள்ளதாகவும் கௌஷலா தெரிவித்தார்**

உலக கனேடிய பல் கலைக்கழக நிறுவனம் வழங்கும் பயிற்சியில் ஈடுபடும் பெண் ஒருவரை படத்தில் காணலாம்.

மரபுகளை மாற்றியமைக்கும் பெண்கள்

'சமுதாயத்தை பற்றி நான் கணக்கெடுப்பதில்லை வீதியில் ஜீன்ஸ் சேர்ட் போட்டு போறம்போது பலர் கின்டல் செய்வார்கள் ஆனால் அவற்றையெல்லாம் நான் கண்டுகொள்வதில்லை. நாம் உழைத்து முன்னேற வேண்டும் என்றால் மற்றவர்களின் விமர்சனங்களை கருத்தில் கொள்ளக் கூடாது எனக்கு இந்தத்தொழிலை பயின்று அதன் மூலம் எனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்பதே ஒரே நோக்கம் என்று கூறினார் மட்டக்களப்பில் நாம் சந்தித்த மகேந்திரன் திஷேந்தினி.

இவர் ஓர் நவநாகரீக பெண்மணி என்று உங்களுக்குத் தோன்றலாம் ஆனால் அவர் தொழில் பயிற்சிக்காக அணியும் சீருடை பற்றியே எம்முடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கோயில்புற தீவில் மகேந்திரன் திஷேந்தினி.வசித்து வருகின்றார்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கல்வியை தொடர முடியாமல் போன பல இளம் பெண்களுக்கான தொழில் பயிற்சிகளை எளைய பல்வேறு உள்நாட்டு அரச சாா்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து உலக கனேடிய பல் கலைக்கழக நிறுவனம் வழங்கி வருகிறது.

இங்கு மகேந்திரன் திஷேந்தினி. போன்று பல பெண்கள் கல்வியு தொழில் பயிற்சிக்களை பெற்று வருகின்றனர் அவ்வாறு பயிற்சி பெரும் 20 வயதான பெரிள்பள் கிரிஷாந்தி தனது அனுபங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

தொழில் பயிற்சியை ஆரம்பிப் பதற்கு முள்னர் தச்சுத் தொழல் என்பது ஆண்கள் மட்டுமே செய்யும் ஒரு தொழிலாகவே தான் கருதியதாகவும் எனினும் நேர்முகத் தேர்வின் பின்னர் தொழில் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட போது தன்னால் முடியமா என்ற கேள்வி எழுந்ததாகவும் கிரிஷாந்தி குறிப்பிட்டார்.

புயிற்சிக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இடையில் விட்டுச் செல்லும் எண்ணம் கூட தனக்கு ஏற்பட்டதாகவும் எனினும் அந்த தவ றான முடியினை தான் மேற்கொள்ளாதமையால் இரண்டு வருடங்க ளாக தனது குடும்பத்திற்கு வேண்டிய வருமானத்தை பெறுவதற்கான தொழிலில் தள்ளாமல் ஈடுபட முடிவதாகவும் அவர் கூறினார்

பெரும்பாலான நிறுவனங்கள் பெண்களுக்கு தொடர்ச்சியாக தையல், அழகு கலை மற்றும் கணினி பயிற்சிகளையே வழங்கி வருகின்றன. இதனால் இவ்வாறான பெண்ணிலைப்படுத்தப்பட்ட தொழில்களுக்கு பெரும் போட்டி நிலவுகின்றது.

எனவே தான் கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவனம் இளம் பெண்களுக்கு ஆண்களால் மட்டுமே கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்டு வந்த உருக்கி ஒட்டும் பயிற்சி(வேல்டிங்) தச்சுத் தொழில் பயிற்சி மற்றும் அலுமினிய இணைப்புப் பயிற்சி போன்றவற்றை வழங்க தீர்மானித்தது

எனினும் இத்தகைய பயிற்சிகளைப் பெரும்போது பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக் இங்கு பயிற்சிபெறும் சிவலிங்கம் கௌஷலா கூறினார்

ஆறுமாதகாலம பயிற்சிகளை பெறும் போது மனக்கசப்புகள் ஏற்பட்டதாகவும் எனினும் தாள்ள அவற்றை பொருட்படுத்தாது கடுமையாக உழைத்து இன்று தனித்து தொழில் செய்யும் ஆளுமையை கொண்டுள்ளதாகவும் கௌஷலா குறிப்பிட்டார்

மரபுகளை மாற்றி பெண்களும் வீடுகளுக்கு சென்று திருத்தப்பணிகள் மேற்கொண்டு வருவது அவர்களின் முன்னேற்றத்தின் எடுத்துக் காட்டு என்றும் அவர் கூறினார்.

ஆரம்பத்தில் பெண்கள் இந்தப் பயிற்சிகளை பெறுவது குறித்து சற்றே மாறுபட்ட எண்ணங்களை கொண்டிருந்த மக்கள் தற்போது தமது மன நிலைகளை மாற்றிக் கொண்டுள்ளனர்.

தன்னைப் போல தாங்களும் உயர வேண்டும் என்ற எண்ணம் தன்னை பார்க்கும் ஏனைய இளைஞர் யுவதிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே இந்த பயிற்சி நெறிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தான் உரிய தரப்பினரிடம் கோரியுள்ளதாகவும் கௌஷலா தெரிவித்தார்

இதேவேளை பயிற்சிகளை முற்றாக நிறைவு செய்யத பின்னர் சொந்தமாக வேலைத்தளம் அமைத்து உயர வேண்டும் என்பது மகேந்திரன் திஷேந்தினியின் நோக்கம்.

தனது குடும்பத்தை காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறுகின் றார்

இவ்வாறான பயிற்சிகளை மேற் கொள்வது பெண்களின் எதிர் காலத்திற்கு பேருதவியாக இருக் கும். எனவே அவர்கள் தயங்காது முள்வந்து இந்தப் பயிற்சிகளை முள்னெடுக்கவேண்டும் தவராா தேவராணியின் கருத்து வெளியிட் டுள்ளாா்.

தமது உழைப்பால் உயர நிலைக் கும் இந்த பெண்கள் ஏனையவர்க ளுக்கு சிறந்த எடுத்துகாட்டாக மாறியுள்ளனர்

இவர்களை போன்று ஏனையவர் களும் தமக்கு தாமே பூட்டிக்கொண்ட மரபு விலங்கு களை உடைத்து விடுதலை பெற் றால் அவர்களின் வாழ்விலும் பல் வியுக்வ பிறக்கும் என்பது அனை வரினதும் நம்பிக்கை.

> **தன்னைப் போல தாங்களும் உயர வேண்டும் என்ற எண்ணம் தன்னை பார்க்கும் ஏனைய இளைஞர் யுவதிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் எனவே இந்த பயிற்சி நெறிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தான் உரிய தரப்பினரிடம் கோரியுள்ளதாகவும் கௌஷலா தெரிவித்தார்**

கொண்டுள்ளதாகவும் கௌஷலா குறிப்பிட்டார்

மரபுகளை மாற்றி பெண்களும்

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் புதிதாக உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே இந்தக் குறு நாடகங்கள் அமைகின்றன. இதன் அடிப்படையில் குடிப்பழக்கத்தை மையமாகக் கொண்டு அமைந்த 'உயிரை வாங்கும் குடி' குறுநாடகத்தின் தொகுப்பு.

விடுகதை

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் வாரா வாரம் உங்கள் கதைகள் பகுதியில் ஒவ்வொரு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு குறு நாடகங்கள் ஒலிபரப்பாகி வருகின்றமை நீங்கள் அறிந்த விடயமே.

ஆண் பெண் இரு பாலருக்குமே திருமண வயது அரசாங்கத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த வரையறை சில இடங்களில் மீறப்படுகிறது. அத்தகைய திருமணங்களுக்கு சமூகம் அங்கீகாரமும் வழங்குகிறது. இளவயது திருமணங்களால் எதிர்காலத் தில் கணவன் மனைவி இருவருக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினை களை மையப்படுத்தி விடுதலை என்ற குறுநாடகம் இந்த வாரம் மீண் டும் வாழ்வோம் நிகழ்சியில் ஒலிபரப்பாகியது.

17 வயது மட்டுமே நிரம்பிய துளசிக்கும் 33 வயதான ராமுக்கும் இரு வீட்டாா் சம்மதத்துடன் திருமணம் நடைபெறுகிறது. பெற்றோாிள் சொல்லை தட்ட முடியாத நிலையில் தனது படிப்பையும் இடைநிறுத்தி விட்டு தன்னை விட 16 வயது கூடிய ஒருவரை திருமணம் செய்து கொள்கிறாள். ராமுக்கு துளசியை தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம் துளசியின் வயது, குழந்தைத்தனமான செயற்பாடுகள். ராம் துளசியிடம் இருந்து விலகி இருக்கவே விரும்புகிறாா். ஆனாால் துளசி ராமை முழு மனதுடன் தன் கணவராக ஏற்றுக் கொண்டு வாழ விரும்புகிறாள். ராமின் மனநிலையை புாிந்து கொள்ளாது, உங்களுக்கு எவ்வாறு இருந்தாலும் பிடிக்கும் என்று கூறுங்கள் நான் அவ்வாறு இருக்க பழகிக் கொள்கிறேன் என்று ராமிடம் கூறுகிறாள். அதை ராம் ஏற்க மறுக்கிறாள். சந்தாப்ப சூழ்நிலையால் உள்ளன நான் திருமணம் முடித்து விட்டேன் அதற்காக உள்ளன என் மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனக்கும் உலக்கும் எந்த வகையிலும் பொருத்தம் இல்லை என்று கூறுகிறாள். ராம் பேசியதை கேட்டு துளசிக்கு பயம் ஏற்படுகிறது. ஆனால் ராம் சாதாரணமாக இது உன்னுடைய வாழ்க்கை நீதான் சிந்தித்து செயல்பட வேண்டும் என்று கூறுகிறாள்.

இப்படியே சில நாட்கள் ஓடிச் செல்கிறது. ஒரு நாள் ராம் தனக்கும் இன்னோரு பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்டருக்கும் தொடா்பு பற்றி துளசியிடம் கூறுகிறாா்.

துளசிக்கு சில விடயங்களைப்பற்றி தெளிவு படுத்துகிறாா். குறைந்தது 10 வருடங்களுக்கு மேல் நாங்கள் இருவரும் சோந்து வாழ முடியாது. காரணம் உடல் ாீதியாக பல மாற்றங்கள் ஏற்படலாம், அப்போது ' தான் உனக்கு வாழ்க்கை என்றால் என்ள என்று புாியும் பக்குவம் ஏற்படும். அந்த நேரத்தில் என்னுடன் வாழ உனக்கு பிடிக்காமல் போகலாம். மன ாீதியாக உனக்கு பல தாக்கங்கள் ஏற்படலாம், சொல்ல முடியாமல் நீ வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதனால இப்படியே ரெண்டு பேரும் பிாிந்த எங்களுக்கு பிடிச்ச மாதிாி வாழ முயற்சி செய்வம். அதற்காக நான் உன்னில குறை சொல்லவில்லை பொியவங்களோட செயற்பாட்டால எங்களோட வாழ்க்கை சீரழிஞக போயிாக்கூடாது. ஏன்று ராம் தனது முடிவை துளசியிடம் கூறினாா். துளசி நடந்த விடயங்கள் அனைத்தையும் தனது தாயாிடம் கூறினாள். முதலில் ஆத்திரப்பட்ட தாய் பின்பு உண்மையை புாிந்து கொள்கிறாா்.

பெற்றோாிகள் தங்களது கௌரவத்திற்காகவும் குடும்ப சூழ்நிலை கருதியும் தங்களது பிள்ளைகளின் விருப்பத்தை முழுமையாக தொிந்து கொள்ளாமல் சிறிய வயதில் திருமணம் செய்து வைக்க முனைகிறாா்கள். ஆனால் இந்த திருமணங்கள் மூலம் எதிா்காலத்தில் கணவன் மனைவி இருவருக்குமிடையில் எவ்வாறான பிரச்சினை களை தோற்றுவிக்கும் என்பதை எவரும் சிந்திப்பதில்லை.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிா்பாா்ப்பாகும்.

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல்

சா்வதேச மனித உாிமைகள் சட்டம், சா்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரபோகிக்கப்படக்கூடிய அனைத்து சா்வதேச நிவங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்றிறனுடன் அமுல்படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிப்பட்டப் கையொப்பமிட்டோா் மீள் உறுதிப்படுத்துகின்றனா். இதன் கீழ் கையொப்ப மிட்டோா் தங்களது பணியாளா்கள் மற்றும் அவா்களது நடவடிக்கை அமுல்படுத்தும் பங்காளா்கள் என்போா் (சா்வதேச/உள்ளூா் அரசாசாா்பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, சஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வா்.

9. **வழிவகைகள்:** உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைத் தேவையாக கட்டுப்பாடுகளற்ற வழிவகைகளை நாம் வேண்டிக் கொள்கின்றோம். மனிதாபிமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியா்களுக்கான அதிகாரத்தை விரைவில் வழங்குவதையும் சங்கப்பகுதியிலிருந்து வெளிக்கொண்டு வரு வதையும் நாம் எதிா் பாா்க்கின்றோம்.

எங்களது செயற்பாடுகள் சா்வதேச அரச சாா்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடா்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சா்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்ட வலுவான ஆவணமோ அல்ல.

Embassy of the Federal Republic of Germany Colombo
JAPAN Embassy of Japan
The Netherlands Embassy
British High Commission
Embassy of Sweden
European Commission
Embassy of Switzerland
United States Agency for International Development USAID
United Nations
NORWEGIAN EMBASSY
UNICEF
Canadian High Commission | Haut-commissariat du Canada
The United States Embassy

மீள்தும் வாழ்வோம் (Life Line) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது
INTERNEWS
USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.